# துவாக்குடி நகராட்சி

| மன்ற கூட்ட நாள் | தீர்மான எண் | பொருள் | அலுவலகக் குறிப்பு |
|---|---|---|---|
| ***2023ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் தேதி வியாழன் கிழமை*** *காலை 10.30 மணிக்கு துவாக்குடி நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் கீழ்க்கண்ட பொருள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக்கூட்டம் நடைபெறும்.* | | | |
| 16.03.23 | 162 | **பொருள் எண்.1**<br>துவாக்குடி நகராட்சி பொதுநிதி 2021-22-ன் கீழ் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் திருச்சி தஞ்சை தேசிய நெடுஞ்சாலை சர்வே எண்.175/6-ல் உள்ள தகன மேடையினை நவீன எரிவாயு தகன மேடையாக மாற்றி அமைக்கும் பணிக்கு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் தடையின்மைச்சான்று பெறுவதற்கு **G.O. Ms.No.40/E&F (EC-1) Dept/Dated: 09.04.2018 Rs.14,200/- Water Act and G.O. Ms.No.41/E&F (EC-1) Dept/Dated: 09.04.2018-Air Act Rs.14,200/-**ன் படி ஆக மொத்தம் ரூ.28,400/- நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வங்கி வரைவோலையாக செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று வரைவோலை செலுத்தியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 1129/2022/இ1** | அனுமதிக்கப்பட்டது. |
| | 163 | **பொருள் எண்.2**<br>துவாக்குடி நகராட்சியில் 29.12.2022ம் தேதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கிட வருகை புரிந்தமைக்கு நகராட்சியின் சார்பாக வரவேற்பு விளம்பரம் தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்கண்டவாறு நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பில்பட்டியலில் கண்ட தொகை தினத்தந்தி முகவர் T.கிருஷ்ணகுமார் செலுத்தியுள்ளதால் அன்னாருக்கு தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பில்பட்டியல் எண் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | தினத்தந்தி | 2223TRY251032631 Dt.29.12.2022 | ரூ.20,160/- |

**<u>அலுவலக குறிப்பு : -</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1052/இ1/2022**

**<u>பொருள் எண்.3</u>**

164

துவாக்குடி நகராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் அய்யப்பா நகர் சர்வே எண்.282/1A1-ல் பூங்கா மேம்படுத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ.22.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.7 நாள்.20.01.2023ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.22.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.3532/2022/இ1-1 நாள்.06.02.2023-ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பணி மேற்கொள்ள 03.03.2023-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | துவாக்குடி நகராட்சி அய்யப்பா நகர் சர்வே எண்.282/1A1-ல் பூங்கா மேம்படுத்தும் பணி | 22.00 | பி. பிரபாகர்<br>எம்.இளங்கோவன் | மதிப்பீட்டை விட 0.001% குறைவு<br>மதிப்பீட்டை விட 0.03% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணி திட்டப்பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள பி.பிரபாகர் (0.001% குறைவு) என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1130/2022/இ1**

அனுமதிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | 165 | **<u>பொருள் எண்.4</u>**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.37118/2022/எம்.ஏ1 நாள்.12.12.2022-ல் தெரிவித்துள்ளபடி பொதுநிதியின் கீழ் கீழ்கண்ட விவரப்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு அனுமதி பெற நகர்மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.21 சிவன் கோவில் உள்புறம் தெற்கு பகுதியில் பேவர் ப்ளாக் சாலை மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணி | 21.50 |
| 2 | முத்துமாரியம்மன் கோவில் வளாக உள்புறத்தில் மழைநீர் வடிகாலுடன் சிறுபாலம் கட்டும் பணி | 5.00 |
| 3 | முத்துமாரியம்மன் கோவில் வளாக உள்புறத்தில் பேவர் ப்ளாக் சாலை அமைத்தல் | 28.50 |
| 4 | வார்டு எண்.15 கண்ணனூர் மாரியம்மன் கோவில் அருகில் சீரணி அரங்கம் கட்டும் பணி | 15.75 |
| 5 | வார்டு எண்.12 வ.உ.சி நகர் (ஆனந்த் நகர்) நூலகத்திற்கு முதல் தளம் அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் | 50.00 |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: இ1/1956/2022

| | | | |
|---|---|---|---|
| | 166 | **<u>பொருள் எண்.5</u>**<br>துவாக்குடி நகராட்சி பகுதியில் 2022-23-ம் ஆண்டு பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது. |

| **வ. எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | வார்டு எண்.13 ராஜீவ் காந்தி நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 4.90 |
| 2 | வார்டு எண்.15 முத்துராமலிங்க தேவர் சாலை பகுதியில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிக்கு கிழக்கு பகுதியில் சுற்றுசுவர் அமைக்கும் பணி | 4.95 |

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><td>3</td><td>வார்டு எண்.15 முத்துராமலிங்க தேவர் சாலை பகுதியில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிக்கு தெற்கு பகுதியில் சுற்றுசுவர் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி</td><td>4.95</td></tr>
<tr><td>4</td><td>வார்டு எண்.04 என்.ஜி.ஓ காலணி பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள அங்கன்வாடி மையத்தை சுற்றி சுற்றுசுவர் அமைக்கும் பணி</td><td>4.80</td></tr>
<tr><td>5</td><td>வார்டு எண்.15 இந்திரா நகர் பகுதியில் மழைநீர் வடிகாலுடன் சிறுபாலம் அமைக்கும் பணி</td><td>4.90</td></tr>
<tr><td>6</td><td>அய்யம்பட்டி மெயின் சாலையில் அமைந்துள்ள சுடுகாடு நடைபாதை அமைக்கும் பணி</td><td>4.85</td></tr>
<tr><td>7</td><td>துவாக்குடி நகராட்சி பகுதி சர்வே எண்.521-ல் உள்ள வானவாசி குளத்தில் தூர்வாரி கரைகளை பலப்படுத்தும் பணி</td><td>9.90</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : - மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.</td><td></td></tr>
<tr><td></td><td>167</td><td>ந.க.எண்: இ1/292/2023<br><u>பொருள் எண்.6</u><br>தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சி பகுதிகளில் பயன்பாட்டில் உள்ள 4 பொது கழிப்பறைகளுக்கும் மற்றும் 15 சமுதாய கழிப்பறைகளுக்கும் QR CODE 20 செ.மீ அகலம் X 30 செ.மீ நீளம் அளவில் 150 ஜி.எஸ்.எம்-ல் ஊதா நிறத்தில் பொருத்த 09.12.2022 விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள தாமரை எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு : -<br>1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Thamarai Enterprises நிறுவனத்தின் விலைப்புள்ளி அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td></td><td>168</td><td>ந.க.எண்: 1249/2022/எச்1<br><u>பொருள் எண்.7</u><br>துவாக்குடி நகராட்சியில் 2023-24ம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு மற்றும் 2022-23ம்ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலக குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br>**ந.க.எண் 970/ பி1/2022** | |
| | 169 | **<u>பொருள் எண்.8</u>**<br>2022-23 ம் ஆண்டிற்கு வருமானவரி (ஒப்பந்ததாரர்கள், அலுவலர்கள்) பிடித்தம் செய்தமைக்கு TDS தாக்கல் செய்யவும் ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை வரியை (E-Filling) திருச்சி, ஆலயம் அசோசியேட்ஸ் நிறுவனம் மூலம் தாக்கல் செய்தமைக்கு ரூ.1,00,000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br>**ந.க.எண். 128/ பி1 /2021** | அனுமதிக்கப்பட்டது. |
| | 170 | **<u>பொருள் எண்.9</u>**<br>இந்நகராட்சிக்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், எழுதுபொருட்கள் மற்றும் கணினிக்கு தேவையான டோனர்கள் மற்றும் இதர பொருட்களை கூட்டுறவு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சிராப்பள்ளியில் இருந்து வாங்கிக்கொள்ளவும் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.7.00 இலட்சம் நகராட்சியின் வருவாய் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br>**ந.க.எண். 599/பி1/2022** | அனுமதிக்கப்பட்டது. |
| | 171 | **<u>பொருள் எண்.10</u>**<br>துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட துவாக்குடி நகராட்சி சர்வே எண். 372/5ல் 1.75 ஏக்கர் பரப்பளவில் உத்தேச மனைப்பிரிவு அமைப்பதற்கு திரு. V. சேகர், பெரம்பலூர் என்பவர், நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு விண்ணப்பம் செய்து அனுமதி கோரியதில், நகர் ஊரமைப்பு மாவட்ட அலுவலகம் வாயிலாக சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் செய்யப்பட்டு, சாலை அமைப்பு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள், மூலை முடுக்குகள் உள்ளிட்ட உள்ளாட்சிக்கான பொது உபயோக இடம் மின்சார வாரியத்திற்கான தானமாக ஒப்படைக்க வேண்டிய இடம் ஆகியவற்றினை, ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபட நகலை இணைத்து பத்திரப்பதிவு அலுவலகத்தில் ஆணையாளர், துவாக்குடி நகராட்சி அவர்களின் பெயரில் பத்திரப்பதிவு செய்ய வேண்டுமென திருச்சிராப்பள்ளி, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக கடித ந.க.எண்.1961/2022/திமா3 நாள்.04.01.2023 தேதியிட்ட கடிதம் வாயிலாக, மனைப்பிரிவு உரிமையாளருக்கு | அனுமதிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறிவுறுத்தப்பட்டது.<br>அதன்பேரில் மனைப்பிரிவு உரிமையாளர் திரு.ஏ.சேகர் நகராட்சிக்கு தானமாக வழங்க வேண்டிய சாலைகள், மூலை முடுக்குகள் ஆகியவற்றை திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 10085/2022 நாள். 05.12.2022 தேதிய தான ஒப்படைப்பு ஆவணம் வாயிலாகவும், தான ஒப்படைப்பு ஆவண எண்.10086/2022 நாள்.05.12.2022 தேதிய ஆவணம் வாயிலாக மின்சார வாரியத்திற்கு வழங்க வேண்டிய இடத்தையும் தானமாக வழங்கியுள்ளார், மேலும் ஓ.எஸ்.ஆர். கட்டணமாக ரூ.24,84,000/- (ரூபாய்.இருபத்தி நான்கு லட்சத்து எண்பத்தி நான்காயிரம் மட்டும்) மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது என திருச்சிராப்பள்ளி மாவட்ட இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர் (மு.கூ.பொ) அவர்களின் கடித்தில் தெரிவித்துள்ளார். சாலை அமைப்பு வரைபடத்தில் உள்ளவாறு பொது ஒதுக்கீடுகளை மனைப்பிரிவு உரிமையாளர் தானமாக வழங்கியதன் அடிப்படையில் இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித ந.க.எண்.1961/2022/திம-3 நாள்.04.01.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக, மனைப்பிரிவு வரைபடத்திற்கு சிறப்பு நிபந்தனைகளுடன் ம.வ/ந.ஊ.இ.இ(திமா) எண்.04/2023 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு மனைப்பிரிவு வரைபடத்திற்கு திட்ட அனுமதி எண். 04/2023 என எண்ணிடப்பட்டு, திட்ட அனுமதி உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தேச மனைப்பிரிவில் 26 எண்ணிக்கை மனைகள் அமைகிறது.<br>மேற்காணும் மனைப்பிரிவில், சாலை அமைக்கும் பணி, குடிநீர் பகிர்மான குழாய் பொருத்தும் பணி, கான்கிரிட் சுவருடன் கூடிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிகள் முடிவுற்றது.<br>மனைப்பிரிவு உரிமையாளர், மனைப்பிரிவு நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்துள்ளார். எனவே, உத்தேச மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் செய்யும் பணியினை முழுவதும் முடித்து நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டும், உள்ளாட்சிக்குத் தான ஆவணம் மூலம் தானமாக வழங்கியுள்ள இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய¦து நகராட்சிக்கு சமர்பிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டும் துவாக்குடி நகராட்சி சர்வே எண்.372/5 இவற்றில் 1.75 ஏக்கர் பரப்பளவில் 26 மனைகளுடன் அமையும் உத்தேச மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு: நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.34/எப்1/2023** | |

| | | | |
|---|---|---|---|
| | 172 | **<u>பொருள் எண்.11</u>**<br>துவாக்குடி நகராட்சி பொது சுகாதார பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் JCB வாகனத்தின் நான்கு டயர்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் அவற்றை மாற்றி புதிய டயர்கள் வாங்கி பொருத்துவதற்கு உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு நகராட்சியின் வருவாய் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br>2. நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று JAYARAJ AUTOMOBILE AGENCY நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>**ந.க.எண்.** 1915/எச்1/2022 | அனுமதிக்கப்பட்டது. |
| | 173 | **<u>பொருள் எண்.12</u>**<br>துவாக்குடி நகராட்சியில் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வரும் திரு.T.கார்த்திகேயன் என்பவர் தொழில்வரி நிர்ணயம் செய்யாததால் ரூ.5,09,010/- இழப்பு என அவற்றை வருவாய் ஆய்வர் மற்றும் வருவாய் உதவியாளர் ஊதியத்தில் பிடித்தம் செய்ய 19.02.2016-ம் தேதிய இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.அ1/315/2014 எண்ணிட்ட கடிதத்தில் உத்தரவிடப்பட்டது இதனை எதிர்த்து மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.WB(MD) NO. 7526 / 2016 என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் அரசு சிறப்பு வழக்கறிஞர் அவர்களை மேற்படி வழக்கில் ஆஜராகவும் அதற்கான உத்தேச செலவு ரூ.10,000/- வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.** 344/சி1/2023 | அனுமதிக்கப்பட்டது. |
| | 174 | **<u>பொருள் எண்.13</u>**<br>74வது இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு ஒளி வசதி மற்றும் உணவு வழங்குதல் போன்றவை செய்து கொடுக்க விலைப்புள்ளிகள் கோரவும் உத்தேச செலவினம் ரூ.50,000/- மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்**. 1524/2022/எச்1 | அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 175 | **<u>பொருள் எண்.14</u>**<br>74வது இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு ஒளி வசதி, அலங்காரம் இனிப்புகள், காலை உணவு மற்றும் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்க 19.01.2023 ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள தாமரை எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள தாமரை எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை அனுமதிக்கலாம்.<br>2. அவசரம் அவசியம் கருதி விநியோக உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| | 176 | **ந.க.எண்.** 1524/2022/எச்1<br>**<u>பொருள் எண்.15</u>**<br>துவாக்குடி நகராட்சி பகுதியில் பாரத மிகுமின் நிறுவன (BHEL) வளாகத்தில் உழவர் சந்தையானது கடந்த 2009-ம் ஆண்டு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், இந்த உழவர் சந்தையினால் திருவெறும்பூர் வட்டார பகுதியில் உள்ள தோட்டக்கலை பயிர்கள் பயிரிடும் விவசாயிகள் தங்களின் வயல்களில் பயிர் செய்யப்படும் காய்கறிகளை நேரடியாக உழவர் சந்தை மூலம் விற்பனை செய்து வருகின்றனர். இச்சந்தை அமைக்கப்பட்டதன் முக்கிய நோக்கம் இப்பகுதியில் வசித்து வரும் பாரத மிகுமின் நிறுவனம் மற்றும் சிட்கோ பகுதியில் பணியாற்றும் ஊழியர்களின் நலன் கருதி ஆரம்பிக்கப்பட்டதாகும். ஒவ்வொரு சனிக்கிழமையும் பாரத மிகுமின் நிறுவன வளாகத்தில் (பயிற்சி பள்ளி அருகில்) காய்கறி வாரச்சந்தை அனுமதிக்கப்பட்டு மாலை வேளைகளில் நடந்து வருகிறது. அதோடு நகராட்சியின் பல பகுதிகளில் சந்தை என்கிற பெயரில் வியாபாரிகள் காந்தி மார்க்கெட்டில் காய்கறிகளை வாங்கி வாரத்தின் அனைத்து நாட்களிலும் வியாபாரம் செய்து பயனடைகின்றனர். இதனால் உழவர் சந்தையில் முற்றிலுமாக காய்கறி விற்பனை நடைபெறுவது குறைந்துவிட்டது. உழவர் சந்தையில் தினந்தோறும் தனது சொந்த வயல்களிலிருந்து உற்பத்தி செய்து கொண்டு வரும் விவசாயிகள் இந்த சந்தைகளினால் கடுமையான பாதிப்பு அடைகின்றனர். எனவே, உழவர் சந்தை சிறந்த முறையில் நடைபெறும் பொருட்டும் திருவெறும்பூர் வட்டாரத்தில் உள்ள தோட்டக்கலை விவசாயிகள் பயன்பெறும் வகையில் நகராட்சி பகுதியில் செயல்படும் தனியார் சந்தைகளுக்கு தடை விதித்து மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு:** உழவர் சந்தையில் வியாபாரம் செய்யும் விவசாயிகளின் நலன் கருதியும், பாரத மிகுமின் | அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 177 | ஊழியர்கள் மற்றும் சிட்கோ தொழிற்பேட்டையில் பணியாற்றும் ஊழியர்கள் நகராட்சி பகுதியில் கடை வைத்து வியாபாரம் செய்யும் சிறு வியாபாரிகள் நலன் கருதி தனியார் சந்தைகளுக்கு தடை செய்து மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 351/2023/H1**<br>**<u>பொருள் எண்.16</u>**<br>துவாக்குடி நகராட்சி பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சென்னை (DPH) அவர்களின் கடித ந.க.எண்.138436/UCH/S2-23 நாள்.15.02.2023ன் படி நீர் மற்றும் கொசுவினால் பரவக்கூடிய நோயினை முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு தடுக்கும் பொருட்டு கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழிக்கும் பொருட்டு ஆறு நாள் கால அட்டவணையின் படி (6 Day Block) தேவையான DBC பணியாளர்களை பணியமர்த்தி பொதுமக்கள் நலன் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகர் பகுதியில் 36 DBC பணியாளர்கள் (கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள்) ஓம் மகளிர் சுய உதவிக்குழு, துவாக்குடி மலை (தெற்கு), திருச்சி -620022 மூலம் பணியமர்த்தி பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இம்மாதம் (31.03.2023) காலநீட்டிப்பு முடிவுற இருப்பதால் பொதுமக்கள் நலன் கருதி நீர் மற்றும் கொசுவினால் பரவக்கூடிய நோயினை முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு தடுக்கும் பொருட்டு 01.04.2023 முதல் காலநீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கவும் அதற்குண்டான செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. ஓம் மகளிர் சுய உதவிக்குழு, துவாக்குடி மலை (தெற்கு), திருச்சி-620022 அவர்களுக்கு காலநீட்டிப்பு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 738/2020/H1** | அனுமதிக்கப்பட்டது. |

ஆணையர்,
துவாக்குடி நகராட்சி.